
# திராவிடத்தால் வாழ்கிறோம்

944

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# இது பெரியார் மண்

**ர.பிரகாசு**

25

**பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.**

## சாதி ஒழிப்பே நோக்கம்!

கல்லூரி மாணவராக இருந்தபோதே, பெரியார் தொண்டராக மாறிய சித்துசாமி, மாலைநேரங்களில் தனது நண்பர்களான ஈஸ்வரன், பொன்னுசாமி, சுப்பிரமணியம், சம்பத், கண்ணையன் உள்ளிட்டோருடன் பெரியார் குறித்தும், திராவிட இயக்கம் குறித்தும் பேசுவது வழக்கமானது.

குருவரெட்டியூர் பகுதியில் அடிக்கடி நடைபெறும் திராவிடர் கழக நிகழ்ச்சிகளுக்குச் செல்லத் தொடங்கினர். அப்போது ஈரோடு மாவட்டத்தின் செயலாளராக இருந்த பிரகலாதன், சேலம் மாவட்டச் செயலாளராக இருந்த கொளத்தூர் மணியிடம் இவர்களை அறிமுகப்படுத்தினார். அதன் தொடர்ச்சியாக, 1986-ஆம் ஆண்டில் காவலாண்டியூரில் திராவிடர் கழகக் கிளை உருவானது.

தொடக்கக் காலத்தில், கோயில் சுவற்றில் ‘கடவுள் இல்லை’ என எழுதி வைப்பதும், அதை அப்பகுதியினர் அழிப்பதும் தொடர்ந்தது. இவ்விவகாரம் முற்றி, கொளத்தூர் மணியிடம் சென்றபோது, ‘கோயில் சுவற்றில் எழுத வேண்டாம்’ என அறிவுறுத்திய பிறகே நிறுத்தினர். ஆனால், ‘கடவுள் இல்லை’ என எழுதியதை அழித்தவர்களின் குடும்பமே, பின்னாளில் கருப்புச் சட்டை அணிந்தது. பெரியார் படிப்பகம் அமைக்க, 2 சென்ட் நிலத்தை, கோயில் தர்மகர்த்தா வழங்கினார். அந்த இடத்தில்தான் 2011-இல் ‘பெரியார் படிப்பகம்’ ஏற்படுத்தப்பட்டது.

2002-இல் வெளியான ‘உன்னை நினைத்து’ திரைப்படத்தில் இறந்துபோனவரின் ஜாதகத்தை வைத்து, ஜோசியக்காரர் குறிசொல்லும் காமெடி காட்சி ஒன்று இடம்பெற்றிருக்கும். அதுபோல காவலாண்டியூருக்கு வரும் ஜோசியக்காரர்களிடம், இறந்துபோன ஒருவரின் ஜாதகத்தை நீட்டுவர். ஜோசியக்காரரும்





> **எ**ன்னுடைய சகோதரர் ராஜசேகரன் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர். ராஜசேகரனின் நண்பர் அசோக் காவலாண்டியூரில் காதல் திருமணம் செய்தவர். அந்த அடிப்படையில்தான் ‘சின்னத்துரை’ படத்தில் காதலர்களை இணைத்து வைக்கும் நாயகனின் ஊருக்கு ‘காவலாண்டியூர்’ எனப் பெயர் சூட்டினேன்.
>
> **-சந்திரசேகரன், திரைப்பட இயக்குனர்.**



‘ஆஹா ஓஹோ’ என அந்த ஜாதகத்தைப் பற்றி கூறுவதைக் கேட்டு, அப்பகுதி மக்களின் மூடநம்பிக்கை தகர்ந்தது. அந்த ஊருக்குள் ஜோசியக்காரர்கள் சென்றே, 30 ஆண்டுகளுக்கு மேலிருக்கும். தாழ்த்தப்பட்டோரைக் கோயிலுக்குள் அழைத்துச்செல்லும் போராட்டங்களும் அப்போது நடைபெற்றன.

சுற்றுவட்டாரத்தில் எங்கும் இரட்டை டம்ளர் முறை கிடையாது. ஊரில் அனைவரும் தூய தமிழில் மட்டுமே பெயர் வைப்பார்கள். பூப்புனித நீராட்டு நிகழ்ச்சிகள் இருக்காது.

1997-இல் ஜூன் 11 முதல் 13 வரை திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி பங்கேற்ற பயிற்சி வகுப்பு அங்கு நடைபெற்றது. பயிற்சி வகுப்புக்குப் பின்னர், அந்த ஊரில் இருந்த கருப்புச் சட்டைகளின் எண்ணிக்கை இருமடங்கானது. 2001-இல் கொளத்தூர் மணி பெரியார் திராவிடர் கழகத் தலைவரானபோதும், 2012-இல் திராவிடர் விடுதலைக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கிய போதும், காவலாண்டியூரும் அவரோடே இணைந்து பயணித்தது.

இந்த இடைப்பட்ட காலத்தில்தான் காவலாண்டியூர் கருப்புச்சட்டைகளின் முதன்மை முகமாக ஈஸ்வரன் உருவாகியிருந்தார். சாதி மறுப்புத் திருமணம் புரிவோருக்கான புகலிடமாகவே காவலாண்டியூரை மாற்றினார் ஈஸ்வரன். ஆயிரக்கணக்கான காதல் திருமணங்கள் ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றிருக்கின்றன. அவற்றில் திரைப்படக் காட்சிகளை மிஞ்சும் பல சம்பவங்களும் உண்டு. அதில் தேசிய அளவில் செய்தியாகி, நாடாளுமன்றத்தில் பேசப்பட்ட சம்பவங்களும் அடக்கம். அத்தனை சம்பவங்களுக்கும் பின்னால் இருந்த நோக்கம் ஒன்றுதான்... ‘சாதி ஒழிப்பு’.

**...பயணிப்போம்.**

## ‘வாலிபப் பெரியார்’ வாழ்வை உரையாக அறிய...

திராவிட இயக்கத்தின் கொள்கை வீரர், கழகத்தின் முதல் பிரச்சாரக் குழுவில் இடம்பெற்றவர், ‘வாலிபப் பெரியார்’ எனப் போற்றப்பட்ட கழக முன்னோடி ஏ.வி.பி.ஆசைத்தம்பி. கழகத்தின் கொள்கைகளையும், சுயமரியாதைக் கருத்துகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் ஆயுதமாக எழுத்தையும் பேச்சையும் சிறுவயது முதலே பயன்படுத்தத் தொடங்கியவர். அரசியல் கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள் என 40-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி.




‘காந்தியார் சாந்தியடைய’ என்கிற அவரது நூல், அன்றைய அரசால் தடைசெய்யப்பட்டு, அதை எழுதியதற்காக ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை பெற்றதுடன், சிறையில் அவர் மொட்டை அடிக்கப்பட்ட கொடூரமும் நிகழ்ந்தன. அப்படிப்பட்ட மகத்தான ஆளுமையான ஆசைத்தம்பியின் வாழ்க்கை வரலாறு குறித்த நூல் ‘வாலிபப் பெரியார்’. கடந்த மாதம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த நூலினை வெளியிட்டிருந்தார்.

இயக்க வரலாற்றைப் பேசும் இந்த நூலின் திறனாய்வுக் கூட்டம் இன்று (29.08.2025) மாலை 6 மணி அளவில் சென்னை அண்ணா சாலை, தேவநேயப் பாவாணர் நூலக வளாக புதுமைப்பித்தன் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீ, பதிப்பாளர் கோ.ஒளிவண்ணன் ஆகியோர் திறனாய்வு செய்யவுள்ளனர். நூல் ஆசிரியர் செ.அருள்செல்வன் ஏற்புரை நிகழ்த்தவுள்ளார். நூலினை வெளியிட்ட டிஸ்கவரி பதிப்பகம் இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்துள்ளது. கழகத்தின் வேராக நின்ற ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் வாழ்வை, சுப.வீ அவர்களின் உரையாகக் கேட்பதற்கு நல்வாய்ப்பு.

# பொய்ப்பெட்டி

**கோவி.லெனின்**

75

**``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''**



## ஆம்புலன்ஸை தாக்கும் அறிவிலிகள்!

**நோயாளி இல்லாத 108 ஆம்புலன்ஸை அ.தி.மு.க. பிரச்சார பாதையில் வேண்டுமென்றே தி.மு.க அரசு விடுவதாக எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டி ஆவேசப்பட்ட நிலையில், அ.தி.மு.க.வினர் ஓர் ஆம்புலன்ஸையும் அதில் இருந்த பணியாளர்களையும் தாக்கியிருக்கிறார்களே?**

108 ஆம்புலன்ஸ் என்பது உயிர் காக்கும் சேவை. கலைஞர் ஆட்சியில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. விபத்து உள்ளிட்ட நேரங்களில் 108 ஆம்புலன்ஸ் சேவையால் பல ஆயிரம் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. வேலூர் மாவட்டத்தில் எடப்பாடி பழனிசாமி முக்கிய சாலையில் பிரச்சாரம் செய்தபோது, அந்த வழியாக வந்த 108 ஆம்புலன்ஸில் நோயாளி இல்லாததால், அதுபற்றி எடப்பாடி பழனிசாமி கடுமையாகக் குறிப்பிட்டு, ‘இனி ஆளில்லாத ஆம்புலன்ஸ் வந்தால், அதை ஓட்டி வருபவர்கள் நோயாளிகளாக மருத்துவமனைக்குப் போக நேரிடும்’ என்று ஆவேசமாகச் சொன்னார். அவரது கூட்டத்திற்காக அழைத்து வரப்பட்டிருந்த அ.தி.மு.க.வினரும் ஆம்புலன்ஸை நோக்கிப் பாய்ந்தனர்.

அந்த ஆம்புலன்ஸ் பள்ளிகொண்டா என்ற இடத்திலிருந்து வேலூர் மாவட்டம், அணைக்கட்டு மருத்துவமனைக்குப் போய்க் கொண்டிருந்தது. அங்கிருந்து ஒரு நோயாளியை அழைத்துக் கொண்டு அவசரமாக வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய எமர்ஜென்சி நிலையில்தான், பள்ளிகொண்டாவிலிருந்து அணைக்கட்டு செல்லும் வழியில், எடப்பாடி பழனிசாமியின் சாலை பிரச்சாரப் பகுதியில் அது செல்ல வேண்டியிருந்தது. அவசர அழைப்புக்கான முறையான பதிவுகள் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களும் 108 ஆம்புலன்ஸ் சேவையில் இருக்கும்.

அவசர சிகிச்சைக்காக ஒரு நோயாளியை அழைப்பதற்காக செல்லும் ஆம்புலன்ஸுக்குள் நோயாளி எப்படி இருப்பார் என்ற அடிப்படை அறிவுகூட இல்லாமல், எடப்பாடி பழனிசாமி ஆவேசம் காட்ட, 24-8-2025 அன்று திருச்சி மாவட்டம், துறையூரில் விபத்தில் சிக்கியவரைக் காப்பாற்றுவதற்காக அவசரமாகச் சென்ற 108 ஆம்புலன்ஸை எடப்பாடி பழனிசாமியின் பிரச்சாரத்துக்காக வந்திருந்த அ.தி.மு.க.வினர் மறித்து விரட்டி, ஆம்புலன்ஸில் இருந்தவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். வேண்டுமென்றே தி.மு.க. அரசு தன்னுடைய கூட்டத்துக்குள் 108 ஆம்புலன்ஸை அனுப்பி, பிரச்சாரத்தைக் கெடுப்பதாக எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டுகிறார்.

எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்தபோது, அன்றைய எதிர்க்கட்சித் தலைவரான இன்றைய முதலமைச்சர் பல ஊர்களிலும் பிரச்சாரம் செய்திருக்கிறார். இன்றைய துணை முதலமைச்சரும் அப்போது பிரச்சாரம் செய்திருக்கிறார். அந்த நேரங்களில் சைரன் ஒலித்தபடி 108 ஆம்புலன்ஸ் பல முறை வந்திருக்கிறது. கூட்டத்தில் இருந்த தி.மு.க.வினரையும் பொதுமக்களையும் பார்த்து, “ஆம்புலன்ஸுக்கு வழி விடுங்கள்” என்றுதான் அவர்கள் சொன்னார்களே தவிர, நோயாளி உள்ள ஆம்புலன்ஸா, இல்லாத ஆம்புலன்ஸா என்று இன்றைய முதலமைச்சரோ, துணை முதலமைச்சரோ அப்போது கேட்கவுமில்லை, அ.தி.மு.க. அரசுதான் திட்டமிட்டு ஆம்புலன்ஸை அனுப்புகிறது என்று ஆவேசப்படவுமில்லை. அரசியல் பக்குவம் நிறைந்தவர்கள் அப்படித்தான் நடந்து கொள்வார்கள். பத்து தோல்வி பழனிசாமிக்குத் தொடர் தோல்வி உறுதி என்பது தெரிந்துவிட்டதால், ஆம்புலன்ஸைத் தாக்குவதற்கு தூண்டுகோலாகியிருக்கிறார். சொந்தக் கட்சிக்காரர்கள் மீது 6 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்ய வைத்ததுதான், அவரது பிரச்சாரத்தின் சாதனை.

**...வினா தொடரும்.**

# ஃப்ளாஷ்பேக்



## எங்கள் பெயர்களைப் படித்த தலைவர்!



மு.விசுவநாதன்

**நா**னும் என்னுடைய நண்பர்கள் த.சுதர்சனம், கோ.பிரகாசம் ஆகியோரும் சிறுவயது முதலே கழக உணர்வுடன் வளர்ந்தவர்கள். திருவல்லிக்கேணிப் பகுதியில் கழகப் பணிகளில் ஈடுபட்டவர்கள். இந்தப் படம் 2015-ஆம் ஆண்டு வாக்கில், தலைவர் அவர்களைச் சந்தித்து தேர்தல் நிதி அளித்தபோது எடுத்துக்கொண்டது. அறிவாலயத்தில் பார்க்க முயன்று முடியாமல் போனபோது, எதிர்பாராத வகையில், வீட்டிலேயே தலைவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. தலைவர் அவர்கள் அந்த நன்கொடை கவரில் எங்கள் பெயர்களைப் பார்த்து படித்தபோது, அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

**– மு.விசுவநாதன், வில்லிவாக்கம், சென்னை–49.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# கருவூலம்

## தூத்துக்குடி சதி வழக்கு!

1953-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் தூத்துக்குடியில் நடைபெற்ற ரயில் மறியல் போராட்டத்தின்போது, ஏற்பட்ட கலவரத்தில், கழகத்தினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. கே.வி.கே. சாமி, எம்.இரத்தினம், எம்.எஸ். சிவசாமி, எஸ்.நடராசன், ஆர்.எஸ்.தங்கப்பழம் ஆகியோர் உள்பட 66 பேர் மீது சதி, கொள்ளை, களவு, ரயிலை நிறுத்தியது ஆகிய பிரிவுகளில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. குண்டடிபட்ட 11 பேர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. வழக்கு ஆறுமாத காலத்துக்கும் அதிகமாகவே நடந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131